குறைந்த ஒய்வு ஊதியம் கிடைக்கிறது. அதற்குப் பின்னாலே ஒரு மாதத்திற்குப் பின்னாலே ஓய்வுபெற்றவர்களுக்கு அதை விட அதிகமாக இன்றைக்கு இருக்கின்ற விதியின் அடிப்படையில் கிடைக்கின்றதே இது நியாயம்தானா? எனவே எல்லோருக்கும் ஒரே சதவிகிதமாக ஓய்வூதியம் அவர்கள் கடைசியில் பெற்ற அந்த சம்பளத்தின் அடிப்படையில், ஓய்வுபெற்ற மற்ற அரசு ஊழியர்களைப்போல நிர்ணயிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது நாம் குறைந்த பட்ச ஒய்வூதியம் 100 ரூபாய் என்று ஆக்கியதன் மூலமாக, ரொம்பவும் குறைந்த தொகையைப் பெற்றுக்கொண்டிருந்தவர்களுக்குச் சலுகை வந்திருக்கிறது. மற்றப்படி 70-க்கு முன்னாலே அவர்கள் பெற்ற பலன்களை, 70-க்குப் பின்னாலே வந்தவர்கள் பெறவில்லை. ஆகவே அந்த வித்தியாசத்தின் காரணமாகத்தான் இந்த வித்தியாசம் வருகிறது.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, தற்போது பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களாக இருப்பவர்களை அரசு ஊழியர்களாக அரசாங்கம் அங்கீகரித்து இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அவர்களுக்கும் அரசு ஊழியர்களுக்குச் சமமான ஊதியம் கொடுக்கப்படுமா? அதோடு கூட ஜில்லா போர்டு நிர்வாகத்தில் இருந்தபோது இருந்த ஆசிரியர்களை 'ஏ' பிரிவு 'பி' பிரிவு என்று பிரிக்கப்பட்ட பிறகு, 'பி' பிரிவினருக்கு அதிகமான ஓய்வூதியமும் 'ஏ' பிரிவினருக்குக் குறைந்த அளவு ஓய்வூதியமும் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அவை இரண்டையும் கவனத்தில் கொண்டு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சொன்ன வித்தியாசம் தவிர, வேறு வித்தியாசம் இருப்பதாக என்னிடத்திலே விவரம் இல்லை. வேறு வித்தியாசம் இருப்பதாகவும் தெரியவில்லை.

திருக்களப்பூர் உயர்நிலைப் பள்ளி

*வினா எண் 28—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் திருக்களப்பூர் அரசு உயர்நிலைப் பள்ளியின் பணம் ரூ. 40 ஆயிரம் கையாடல் நடைபெற்றுள்ளதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

TRUTH ALONE TRIUMPHS

1981 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) பள்ளி நிதியில் கையாடல் நடைபெற்றுள்ளது உண்மை.

(ஆ) அதற்குப் பொறுப்பான தலைமை ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் தற்காலிக பணிநீக்கம் செய்யப் பட்டுள்ளார். காவல் துறையினரால் குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலனாய்வு நடைபெற்று வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி நிதி வசூலில் 40 ஆயிரம் ரூபாய் களுக்கு மேல் கையாடல் நடைபெற்றிருக்கிறது. அந்தப் பணத்தை திருப்பி வசூலிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது அவர் மீது கிரிமினல் வழக்கு இருப்பதாக விவரம் இருக்கிறது. மற்ற நடவடிக்கைகள் வழக்கம்போல எடுக்கப்படும்.

[முற்பகல் 9—30]

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் : கனம் சபாநாயகர் அவர்களே, பல ஆடிட்கள் எல்லாம் இருக்கும்போது இம்மாதிரி யான கையாடல் எப்படி ஏற்பட்டது? இதை தவிர்ப்பதற்கு எப்படி அரசாங்கம் என்னென்ன முறைகளை திரும்பவும் நடை பெறாமல் இருப்பதற்கு, அனுசரிக்கப்போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கையாடல் பல்வேறு நிலை களில், பல்வேறு இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எந்தவித அதிகாரங்கள் இருந்தாலும் கையாடல் பல கட்டங்களில் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். தலைமை ஆசிரிய ருக்கு சில அதிகாரங்களை தருகிறோம். அவற்றை நல்ல முறை யில் பயன்படுத்த வேண்டும். தலைமை ஆசிரியர்கள் அதிகப் படியான சம்பளம் வாங்கக்கூடிய ஒரு பொறுப்புள்ள அதிகாரி. அவரே இப்படி செய்கிறார் என்பது தான் வேதனைக்குரிய ஒன்றாகும். இப்படிப்பட்ட நிலை ஏற்படுகிறபோது அவருக்கு தரப்பட்டிருக்கிற அதிகாரங்களை எடுக்கிற நிலைமையை செய்தால் பள்ளிக்கூடமே நடக்காது. ஆகவே இதைப்பற்றி நாம் பரிசீலித்து தவறு செய்கிறவர்களை தண்டிப்பதன் மூல மாக நாம் குறைபாட்டை போக்க முடியும். அவர்களுக்கு கொடுத்திருக்கிற அதிகாரங்களை எடுக்க வேண்டுமென்றால் கீழ்நிலையில் எதுவுமே நடைபெறாது.